சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS: 128/2017

2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04 ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கிருஷ்ணன் (DW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

04.01.2023

எனக்கு எழுத படிக்க தெரியாது. என் அண்ணன் ராஜேந்திரன் படித்துள்ளரா என்றால் இல்லை. என் தம்பி சுப்பிரமணிக்கு எழுதபடிக்க தெரியும். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். ஆவியூரிலும் காரியாபட்டியிலும் படித்தார். 4 ம் பிரதிவாதி சுப்பிரமணி கடை வைத்து வியாபாரம் செய்கிறார். இந்த வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் என் தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் அவர் சம்பாதித்து வாங்கி சொத்துக்கள். என் தந்தை சம்பாதித்து வாங்கிய சொத்துக்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிரையம் வாங்கியதற்கான பத்திரம் மற்றும் பட்டாக்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்னதுபோல் எந்த ஒரு கிரைய பத்திரமும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு கிரைய பாத்தியம் என்பதை காட்ட எந்த ஒரு ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் என் தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் என் தங்கை

இருவரும் எந்த வருடம் பாகம் கேட்டார்கள் என்றால் பாகம் கேட்கவே இல்லை. இந்த வழக்கு பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தை இறப்பதற்கு முன்பு காசநோய், ரத்த கொதிப்பு இருந்ததாக சொல்லியிருக்கிறேன். எந்த மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளித்தோம் என்றால் காரியாபட்டி சின்னகருப்பண் மருத்துவனையில் வைத்து சிகிச்சை அளித்தோம். 6 மாதங்கள் சிகிச்சை அளித்தோம். மதுரை சரவணா மருத்துவமனையிலும் சிகிச்சை அளித்தோம். சிகிச்சை அளித்ததற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் வைத்திருக்கோமா என்றால் இல்லை. என் தந்தைக்கு எந்த வியாதியும் இல்லை என்றும் இந்த வழககிற்காக வியாதிகள் இருந்ததாவும் சிகிச்சை அளித்தாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காரியாபட்டி சின்னகருப்பண், மதுரை மருத்துவனையில் வைத்து சிகிச்சை அளித்தபோது வாதிகள் வந்து பார்த்தார்கள். அந்த சமயத்தில் என் தந்தை பேசும் நிலையில் திடகாத்திரமாக இருந்தார். அந்த சமயத்தில் சொத்துக்களை பற்றி என் தந்தை யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. என் தந்தை சாகும்வரை சொத்துக்களை பற்றி எதுவும் சொல்லவில்லை. நாங்களும் சொத்துக்கள் சம்மந்தமாக என் தந்தையிடம் கேட்கவில்லை. என் தந்தை சொத்துக்கள் சம்மந்தமாக எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் எழுதி வைத்துள்ளார். அவர் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். உயில் எழுதி என்னிடம் கொடுத்தாரா என்றால் அண்ணன் தம்பி மூவரிடமும் கொடுத்தார். எங்கு வைத்து கொடுத்தார் என்றால் எங்கள் வீட்டில் வைத்து கொடுத்தார். எங்கள் வீடு ஆவியூரில் இருக்கிறது. என் அப்பா சாகும் வரை மீனாட்சிபுரம் தோட்டத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். இறந்த பிறகு தான் அடக்கம் செய்வதற்காக ஆவியூருக்கு எடுத்து சென்றோம் என்றால் சரிதான். என் அம்மாவும் அப்பாவும் என் தாயார் கிரையம் வாங்கிய சொத்தில் கிணற்றில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் ஆவியூரில் குடியிருந்து வந்தேன் என்றால் இல்லை. நான் தோட்டத்தில் தான் குடியிருந்து வந்தேன்.

என் அண்ணனும் தம்பியும் மட்டும் ஆவியூரில் குடியிருந்து வந்தார்கள். கடைசி வரை விவசாயம் செய்து வந்ததால் ஆவியூருக்கு செல்லவில்லை என்றால் அவர் விவசாயம் செய்யவில்லை என்னுடன் இருந்தார். என் தந்தை திடகாத்திரமாக இருந்தார் என்றும் விவசாயம் செய்து வந்தார் என்றும் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணம் எப்போது எனக்கு தெரியவரும் என்றால் 03.01.2009 ல் உயில் ஆவணத்தை எங்களிடம் கொடுத்தார். அதற்கு 1 மாதத்திற்கு முன்பு உயில் பற்றி சொன்னார். உயில் பற்றி என்ன எழுதி வைத்திருப்பதாக சொன்னார் என்றால் உயில் எழுதி வைத்திருப்பதாக சொன்னார். என் அக்கா கணவர் மற்றும் பெரியப்பா மகனை வைத்து உயில் எழுதி வைத்திருப்பதாக சொன்னார். அதன் பிறகு தான் என் தந்தை இறந்துபோனார். நான் வழக்கிற்காக வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய பாகசொத்தை மோசடி செய்வதற்காக பின்யோசனையிட்டு பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை உற்பத்தி செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தில் யார்யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் நாராயணன், சண்முகவேல் ஆகியோர் கையெழுத்து செய்துள்ளார்கள். சண்முகவேல் என் சம்மந்தகாரர் என்றால் சரிதான். சண்முகவேல், நாயாரணன் தவிர வேறு கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. என் அம்மாவை பற்றி உயிலில் எதுவும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அம்மா இந்த உயில் சம்மந்தமாக எதுவும் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. என் தாயாருக்கு உயில் சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றால் தெரியும். உயிலில் என் தாயார் கையெழுத்தோ கைரேகையோ வைக்கவில்லை. பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணம் யாரை வைத்து எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் வீட்டில் வைத்து எழுதியதாக என் அப்பா சொன்னார். நான் நேரடியாக பார்க்கவில்லை. மந்திரியோடை காரர் ராமசாமி பத்திர எழுத்தர். அவரை வரவைத்து எழுதியதாக சொன்னார்.

பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை பற்றி முன் வழக்குகளில் சொல்லியிருக்கிறோமா என்றால் சொல்லியிருக்கிறோம். இந்த வழக்கிற்கு பின்னர் உற்பத்தி செய்த உயில் என்பதால் தான் முன் வழக்குகளில் பி.வா.சா.ஆ 1 உயில் சம்மந்தமாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கிடைக்க கூடிய பாகத்தை கிடைக்க விடாமல் பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு அனுமதிக்கதக்கது என்று வாதிகளுக்கு இந்த வழக்கில் சரிபாகம் கிடைக்க கூடியதும் என்றால் ச ரியல்ல.

மறுவிசாரணை இல்லை.